In the Court of Special Court for trial of cases under SC & ST (PoA) Act, Thoothukudi

Case No: S.C.55/2021

Deposition of P.W.1

****

| | |
|---|---|
| Name | திரு.செல்வகுமார் |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 07th day of April 2022

**முதல் விசாரணை :**

நான் தற்போது மேலஊரால் வடக்குதெருவில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது தமிழ்நாடு காவல்துறையில் முதல் நிலை காவலராக கோவில்பட்டி கிழக்கு காவல்நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். நான் இந்து பள்ளர் வகுப்பை சார்ந்தவர். ஆஜர் எதிரிகளை தெரியும். 2007ம் வருடம் எட்டையாபுரம் அரசு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியில் தங்கி ராஜா மேல்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பு படித்து வந்தேன். அப்போது முழு ஆண்டு பரிட்சை நடந்து கொண்டிருந்தது. 10.04.2007ம் வருடம் இரவு 9.15 மணிக்கு நான் விடுதியில் படித்துக்கொண்டிருந்தபோது எங்கள் விடுதியில் தங்கி படிக்கும் விஜயராகவன் மற்றும் ராம்குமார் ஆகியோர் நான் படித்துக்கொண்டிருந்தபோது லைட்டை ஆப் செய்தார்கள். நான் சமூக அறிவியல் பரீட்சைக்காக படித்துக்கொண்டிருக்கிறேன் என்றும், ஏன் லைட்டை அணைக்கிறீர்கள் என்றும் கேட்டேன். அதற்கு இருவரும் அப்படித்தான் லைட்டை ஆப் செய்வோம் என்று சொன்னார்கள். எனக்கும் அவர்களுக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டது. மேற்படி இருவரும் ராம்குமாரின் சித்தப்பா ரஜினி என்பவருக்கு

போன் செய்து வரச்சொன்னார்கள். ரஜினி என்பவரும், குருமூர்த்தி என்பவரும், ராம்குமாரின் அப்பா சுப்புராஜ், ராமகிருஷ்ணன், பரமசிவம் ஆகியோர்கள் ஹாஸ்டலுக்கு வந்தார்கள். அப்போது இரவு 10.30 மணி இருக்கும். விடுதியில் விடுதி காவலர் சகாயராஜ் என்பவரிடம் செல்வகுமார் யார் என்று கேட்டு சத்தம் போட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது நான் மாடியில் இருந்தேன். சத்தம்கேட்டு கீழே இறங்கி வந்தேன். என்னுடன் விஜயராகவனும், ராம்குமாரும் இறங்கி வந்தார்கள். விஜயராகவனும், ராம்குமாரும் சித்தப்பா ரஜினி பக்கத்தில் போய் நின்று கொண்டார்கள். அப்போது ரஜினி என்பவர் என்னுடைய சட்டையை இழுத்து பிடித்து பண்ணி மேக்கிற பள்ளப்பயலே, நீ என்ன படித்து புடுங்கப்போற, பள்ளக்கூதிமவனே என்று சொல்லி என் சட்டையை இழுத்து பிடித்து அவர் கையால் என்னுடைய இரு கன்னத்திலும் மாறிமாறி அடித்தார். குருமூர்த்தி தேவர் என்பவர் நெஞ்சிலும், உயிர்தளத்திலும் எட்டி உதைத்தார். பின் காலில் விழச்சொன்னார்கள். நான் அங்கிருந்து தப்பிக்கலாம் என்று நினைத்து ஒதுங்கும்போது வாட்ச்மேன் பக்கத்தில் இருந்த ராம்குமார் அப்பா சுப்புராமும், ராமச்சந்திரனும், பரமசிவமும் சேர்ந்து நீ எங்கல ஓடுவ, இத பற்றி எங்கயாவது சொன்னால் கொலை செய்து விடுவோம் என்று மிரட்டினார்கள். பின்பு என்னுடன் படித்த செல்வமுருகன், முருகேசன், சின்னத்துரை மற்றும் ஹாஸ்டல் வார்டன் முத்துச்சாமி, வாட்ச்மேன் சகாயராஜ் ஆகியோர்களுக்கு தெரியும். அதன் பின்பு நான் நடந்தே ஊருக்கு சென்றுவிட்டேன். ஊரில் அப்பாவிடம் சொன்னேன். எனக்கு மறுநாள் 11.04.2007 ல் சமூகஅறிவியல் பரீட்சை இருந்ததால் பரீட்சை எழுதிவிட்டு நெஞ்சிலும், உயிர்தளத்திலும் அதிக வலி இருந்ததால் எனது அப்பா என்னை அழைத்துக்கொண்டு 11.04.2017 அன்று மாலை 3.10 மணி அளவில் கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தார். அங்கு எட்டையாபுரம் காவல்நிலையத்திலிருந்து ஆய்வாளர் வந்தார். நான் நடந்த சம்பவத்திற்கு புகார் வாக்குமூலம் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவதுதான். அது

**அ.சா.ஆ.1** ஆகும். அதில் எனது அப்பா வரதராஜ் அறிவேன் சாட்சியாக கையெழுத்து செய்தார். இது சம்பந்தமாக என்னை காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை எதிரிதரப்பில் :**

நான் காவல்துறையில் பணியில் சேர்ந்தபிறகு எத்தனை வழக்குகளுக்கு சாட்சிகள் சொல்ல போயிருப்பேன் என்றால் ஒரேயொரு வழக்கிற்காக போக்சோ நீதிமன்றத்திற்கு சென்றுள்ளேன். ஹாஸ்டலில் நான் 2 வருடமாக அதாவது 9, 10 வகுப்புகளுக்காக சேர்ந்து படித்து வந்தேன். நான் தங்கியிருந்த ஹாஸ்டலில் எனது சமூகத்தை சார்ந்தவர்கள் எத்தனை நபர்கள் என்று கேட்டால் எனக்கு அதை பற்றி தெரியவில்லை. மாற்று சமூகத்தை சேர்ந்தவர்கள் எத்தனைபேர் படித்திருப்பார்கள் என்றால் நிறைய பேர் படித்திருப்பார்கள். ஹாஸ்டலில் வாட்ச்மேன், வார்டன், சப் வார்டன், சமையல்காரர், இரவு காவலாளி ஆகியோர்கள் அங்கு பணி செய்து வந்தார்கள் என்றால் வார்டன் ஒருவர், வாட்ச்மேன் மற்றும் சமையல்காரர் ஒரு நபர் உண்டு. 6ம்வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு மேற்படி விடுதியில் அறைகள் ஒதுக்கப்பட்டு அதில்தான் அவர்கள் இருக்க வேண்டும் என்றால் அறைகள் உண்டு. விஜயராகவன், ராம்குமார் ஆகியோர்களுக்கு விடுதியின் தரைதளத்தில் அறைகள் ஒதுக்கப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. அவர்கள் மாடியில்தான் இருந்தார்கள். அவர்களுக்கு 4ம் நம்பர் ரூம் ஒதுக்கப்பட்டு அதில்தான் அவர்கள் இருந்தார்கள் என்றால் சரியல்ல. எனக்கு மாடியில் 5ம் நம்பர் ரூம் ஒதுக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். நான் வெளி வராண்டாவில்தான் படித்துக்கொண்டிருந்தேன், அப்போதுதான் அவர்கள் லைட்டை ஆப் செய்தார்கள். நான் எனது முதல் விசாரணையிலும், புகாரிலும் வராண்டாவில் படித்துக்கொண்டிருந்ததாக எதுவும் சொல்லவில்லை என்றாலும், தற்போதுதான் வராண்டாவில் இருந்து படித்துக்கொண்டிருந்ததாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. மற்ற வகுப்பு மாணவர்கள் அன்றைய நாளில் விடுமுறையில்

இருந்தார்கள் என்றால் சரியல்ல. 3 வது சாட்சி வரதராஜன் எனது தகப்பனார். வழக்கின் சாட்சிகளான செல்வமுருகேசன், முருகேஸ்வரன், சின்னத்துரை ஆகியோர்கள் எங்கள் ஊரை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். மேற்படி மூன்று பேரும் எனது சமுதாயத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான், உறவினர்கள் அல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் எனக்கும் முன்பகை ஏதும் இருந்ததா என்று கேட்டால் இல்லை. சம்பவத்திற்கு முன்னால் ஆஜர் எதிரிகளை எத்தனை வருடத்திற்கு முன்னால் தெரியும் என்று கேட்டால் சம்பவத்திற்கு முன்னால் யாரையும் தெரியாது. நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், விஜயராஜ், ராம்குமார் ஆகியோரை விசாரித்தால் வழக்கின் விவரங்கள் தெரியும் என்றால் தெரியும். மற்ற மாணவர்களிடம் விசாரணை செய்தாலும் வழக்கின் விவரங்கள் தெரியும் என்றால் சரிதான். ஹாஸ்டலில் சேருவதற்கு முன்பு ஒரு பதிவெண் கொடுப்பார்கள் அது தெரியுமா என்றால் அது தற்போது தெரியாது. நான் பத்தாம் வகுப்பிற்கான ஹால் டிக்கெட் எதுவும் வழக்கின் விசாரணையில் கொடுத்தேனா என்றால் ஞாபகம் இல்லை. பொதுவாக மாலை 6 அளவில் விடுதி கேட்டை மூடிவிடுவார்கள் என்றும், பின்பு காலை 6 மணி அளவில்தான் திறப்பார்கள் என்றால் அடைக்கும்போது 8 மணி ஆகிவிடும். டியுசன் போன மாணவர்கள் திரும்ப வருவார்கள் என்பதால் கேட் அடைப்பதற்கு 10 மணி வரைக்கும் ஆகிவிடும். எங்களது ஹாஸ்டலில் தொலைபேசி வசதி எதுவும் கிடையாது என்றால் சரிதான். எனக்கோ, சக மாணவர்களுக்கோ செல்போன் வைக்கும் வசதி அப்போது கிடையாது என்றால் இல்லை. தரைதளத்தில் உள்ள மாணவர்கள் மாடிக்கு சென்றாலோ, மாடியில் உள்ள மாணவர்கள் தரை தளத்திற்கு வந்தாலோ அதற்கு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றால் சரியல்ல. ராம்குமாரும், விஜயராகவனும் தொலைபேசி மூலம் பேசி அவருடைய சித்தப்பா ரஜினிக்கு சொன்னார்கள் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 10.04.2007 தேதியில் ஹாஸ்டல் கதவு மூடப்பட்டது என்றாலும், நான் சொல்வதுபோல் யாரும் ஹாஸ்டலுக்குள்ளே

வரவில்லை என்றாலும் சரியல்ல. ஹாஸ்டலுக்குள் வருவதாக இருந்தால் தகவல் சொல்லி அவர்கள் சொல்லி பார்க்க வேண்டும், நான் கூறுவதுபோல ஹாஸ்டலுக்குள் வரமுடியாது என்று சொன்னால் சரியல்ல. ஹாஸ்டலுக்குள் வருபவர்களுக்கு பதிவேட்டில் கையெழுத்து பெறப்பட்டுத்தான் பார்க்க முடியும் என்றால் சரியல்ல. பொதுவாக இரவு 8 மணிக்கு ஹாஸ்டல் வார்டன் முத்துச்சாமி அவரது வீட்டிற்கு போய்விடுவார் என்றால் சரியல்ல, 10 மணி வரை ஆகும். அதற்கு பிறகு வாட்ச்மேன் சகாயராஜ்தான் பணியில் இருப்பார் என்றால் சரிதான். நான் 10.04.2007 ல், ஹாஸ்டலை விட்டு வெளியேறி விட்டேன் என்றால் சரியல்ல. நான் ஹாஸ்டலில் இருந்து தப்பி ஓடியதால்தான் எனக்கு காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எட்டையபுரத்திலிருந்து மேல ஈராலுக்கு எவ்வளவு தூரம் என்று கேட்டால் 4 1/2 கி.மீ. தூரம் இருக்கும். நான் ஹாஸ்டலில் இருந்து சென்றது தொடர்பாக வாட்ச்மேன், காவல்நிலையத்திற்கு புகார் கொடுத்தாரா என்றால் இல்லை. மேலதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஹாஸ்டலில் இருந்து எனது அப்பாவுக்கும் தகவல் எதுவும் கொடுக்கவில்லை. நான் ஹாஸ்டலில் இருந்து வீட்டுக்கு இரவு சுமார் 10 லிருந்து 11.30 மணிக்குள் சென்று சேர்ந்திருப்பேன். நான் எனது அப்பாவிடம் வழக்கு சம்பந்தமாக தகவல் சொன்னேன். அது சம்பந்தமாக புகார் கொடுக்க எனது அப்பா உடனே கூட்டிச்சென்றாரா என்றால் மறுநாள் பரீட்சை நடப்பதால் செல்லவில்லை. பரீட்சை எழுத போகும் முன்னால் முதல்நாள் நடந்த சம்பவம் குறித்து தலைமை ஆசிரியருக்கு ஏதேனும் தகவல் கொடுத்தேனா என்றால் இல்லை. சூப்பர்வைசரிடமும் ஏதேனும் சொன்னேனா என்றால் சொல்லவில்லை, கடைசி பரீட்சை என்பதால் சொல்லவில்லை. பரீட்சை முடியும் மதியம் 1 மணி வரை நான் நல்ல நிலையில்தான் இருந்தேனா என்றால் இல்லை. பரீட்சை நடக்கும் இடத்தில் மருத்துவ குழு இருந்திருக்கும், அவர்களிடம் தகவல் சொன்னேனா என்றால் குறிப்பிட்ட நேரம்தான் உள்ளது என்பதால் சொல்லவில்லை. நான் மறுநாள் கோவில்பட்டி மருத்துவமனைக்கு செல்லும்

வரையில் எனக்கு எதுவும் உடல் உபாதை இருந்ததா என்று கேட்டால் இருந்தது. இடைப்பட்ட நேரத்தில் சிகிச்சை எதுவும் எடுக்கவில்லை என்றால் எடுக்கவில்லை. ரஜினி வழக்கறிஞரை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் சம்பவத்தின்போதுதான் தெரியும். குருமூர்த்தி வழக்கறிஞரை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் அவரை தெரியும். மேற்படியார்கள் சட்டத்தை மதிப்பவர்கள் என்றாலும், அவர்கள் மீது வேண்டுமென்றே பழி சுமத்துகிறேன் என்றாலும் சரியல்ல. ரஜினி வக்கீலுக்கும், எனது அப்பாவிற்கும் முன்பகை உள்ளது என்றாலும், அதை நான் தவறாக பயன்படுத்துகிறேன் என்றாலும் சரியல்ல. சொன்ன நாள் மற்றும் சொன்ன நேரததில் நான் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், என் அப்பா சொல்லிக்கொடுத்ததின் பேரில் எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும், எதிரிகள் மீது பொய்யாக குற்றம் சுமத்துகிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>**

... இல்லை ...

ஒப்பம்/– (செல்வக்குமார்)